# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW18

| | | | |
|---|---|---|---|
| Name | : அன்பழகன் | Caste | : |
| S/o. | : வரதராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 29.10.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 and A2 present.

முதல் விசாரணை;

நான் நாமக்கல்லில் ராமாபுரம் புதூர் காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் சதர்ன் தனியார் பேருந்தில் ஓட்டுனராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் ஜோதி பேருந்தில் ஓட்டுனராக பணிபுரிந்தேன். 22.12.2014ம் தேதி நான் காலை 9.20 மணிக்கு சேலத்திலிருந்து நாமகல்லுக்கு ஜோதி பேருந்தை ஓட்டிச்சென்றேன். காலை 10.00 மணிக்கு நான் வாகனத்தை ஓட்டிச்சென்றபோது, சந்தியூர் பிரிவு அருகே வேதவிகாஸ் பள்ளி அருகே, மணல் லாரி ஒன்று வேகமாக வந்து சென்ட்ரல் மீடியனை உடைத்துக்கொண்டு வந்து நான்

ஓட்டிச்சென்ற ஜோதி பேருந்தின் மீது இடித்துவிட்டது. பஸ் முழுவதும் சேதமடைந்துவிட்டது. பேருந்தில் இருந்த பயணிகளில் 2 பேர் இறந்துவிட்டார்கள். எனக்கு இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. சுமார் 5 பேருக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லிக்கொண்டார்கள். பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக என்னை விநாயகா மிஷன் மருத்துவமனையில் சேர்த்தார்கள். மருத்துவமனையில் வைத்து டிஎஸ்பி என்னை விசாரித்தார். விபத்து எப்படி நடந்தது என்று கேட்டார். நான் நடந்த விவரத்தை சொன்னேன். விபத்தின்போது பைக்கில் 2 பேர் குழந்தையுடன் வந்தார்கள். பைக் மீதும் லாரி மோதி விட்டது. பைக்கில் வந்த நபர்களும் இறந்துவிட்டார்கள்.

1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து சமயத்தில் எனக்கு என்ன வயதிருக்கும் என்றால் 29 வயதிருக்கும். சம்பவத்திற்கு முன்னர் எத்தனை வருடமாக லாரி ஓட்டுனராக இருந்தேன் என்றால் 7,8 வருடமாக இருந்தேன். ஜோதி பேருந்தில் ஓட்டுனராக பணியில் சேர்ந்து எத்தனை நாள் கழித்து சம்பவம் நடந்தது என்றால் முதல் நாள் பணியில் சேர்ந்து 2வது நாள் சம்பவம் ஏற்பட்டது. அந்த சமயத்தில் எனக்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்று போலிசார் விசாரித்தார்களா என்றால் எனக்கு ஓட்டுனர் உரிமம் இருந்தது, அதை போலிசாரிடம் ஒப்படைத்தேன்.

காலை 9.20 மணிக்கு பேருந்தை சேலத்திலிருந்து ஓட்டிச்சென்று நாமக்கல்லிலிருந்து 12.00 மணிக்கு திரும்பி சேலத்திற்கு வரவேண்டும் என்றால் சரி. சம்பவத்தன்று பேருந்தில் சுமார் 50 பேர் இருந்திருப்பார்கள்

என்றால் 40 முதல் 50 பேர் இருந்திருப்பார்கள். அந்த சமயத்தில் சேலத்திலிருந்தும், ராசிபுரத்திலிருந்தும் நாமக்கல்லுக்கு போகும் வண்டிகள் நிறைய உண்டு என்றால் அதைபற்றி எனக்குத் தெரியாது. சம்பவத்தன்றுதான் எனக்கு முதல் அனுபவம் என்றும், நாமக்கல்லிருந்து சேலத்திற்கு திரும்பி வர வேண்டும் என்ற அவசரத்தில் நான் பேருந்தை வேகமாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. அதனால்தான் பேருந்தின் இடதுபுறம் சேதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.